# நீரழிவு நோயாளியின் கால் விரணமாற்றுவதில் குப்பிளாய் எண்ணெயின் செயற்திறனை மதிப்பிடல் - நோயாளி அறிக்கை

க. ஶ்ரீதரன்[1*] மற்றும் சி. அன்புச்செல்வி[2]

பொதுவாக நீரழிவு நோயாளிகளில் 25% கால் விரணத்தினால் பாதிக்கப்படுகின்றனர். நீரழிவு நோயின் பாதிப்புகளாக நரம்பு மண்டலங்களின் செயற்பாடு பாதிக்கப்படுவதால் நாடிகளில் இரத்தவோட்டம் பாதிக்கப்பட்டு இதன் விளைவாக காலில் விரணங்கள் ஏற்படுகின்றது. இழையங்களும் பாதிப்படைந்து இந்த விரணங்கள் இலகுவில் ஆறுவதில்லை. இதன்பால் பாதம் அல்லது காலின் ஒரு பகுதி, என்புகள் கூட அகற்றப்படுகின்றன. சிகிச்சைக்காக 65 வயதுள்ள ஆண் நோயாளி நீண்டகாலமாக நீரழிவு நோயுக்குள்ளானவர். அவரது இடது காலிலுள்ள பெருவிரலிடையில் விரணம் ஏற்பட்டு மேலைத்தேய அரச மருத்துவமனையில் சிகிச்சை பெற்று அந்த விரணமானது பல மாதங்களாக குணமாகாத நிலையில் அவருக்கு சத்திர சிசிச்சை நிபுணரினால் பெருவிரலை அகற்றுவதற்கு பரிந்துரைக்கப்பட்டது. அதற்கு அவர் சித்த சிகிச்சை பெறுவதற்காக ஹேர்பல் கெல்த் கெயார் சென்ரருக்கு வருகை தந்தார். அவருடைய கால் புண்ணுக்கு குப்பிளாய் எண்ணெய் வெளிப்பிரயோகமாக ஒவ்வொரு நாளும் போடப்பட்டது. மிகவும் தொற்று நீக்கிய நிலையில் சிகிச்சை மேற் கொள்ளப்பட்டது. நான்கு மாதச் சிகிச்சையில் அவருடைய புண் பூரண குணமாகியது. இச்சிகிச்சையில் புகைப்படம், கண்களால் புண்களை அவதானித்தல் ஆகியவற்றின் மூலமும் புண்ணின் வேதனை, நிறமாற்றம், மணம், சீழ்த்தன்மை, புதிதாக தோல் உருவாதல், புண்ணின் அளவு என்பன அளவுகோல்களாக அளவிட்டு ஆய்வு மதிப்பீடு செய்யப்பட்டது. ஆய்விலே குப்பிளாய் எண்ணெயானது விரணமாற்றுவதில் விரணத்திலுள்ள சீழ்களை அகற்றுவதிலும், அதில் இலையான் வந்திருந்து அதன் மூலம் புழுக்கள் உருவாவதையும் தடுக்கவல்லது. இது நீரழிவு நோயில் சிறப்பான செய்கை செய்கிறது. சீழ்கள் இலகுவாக அகற்றப்படுவதால் மணம் விரைவாக அகன்று விடுகிறது. குப்பிளாய் எண்ணெய் தசைவளர்ச்சியை விரைவாக உண்டாக்கும் ஆற்றலைக் கொண்டிருப்பதால் விரைவாக விரணமாறுகிறது. குப்பிளாய் இலைச்சாறு பக்ரீரியாக்களின் தாக்கத்திற்கு எதிராக நுண்ணுயிர்க்கொல்லி தன்மையை கொண்டிருப்பது அறியப்பட்டுள்ளது. குப்பிளாய் எண்ணெயானது நீரழிவு நோயாளிகளின் கால் விரணங்களை விரைவாக குணமாக்குவதில் சிறப்பான பங்கு வகிக்கிறது.

*திறவுச்சொற்கள்: குப்பிளாய் எண்ணெய், விரணம்.*

[1]ஹேர்பல் கெல்த் கெயர் சென்ரர், யாழ்ப்பாணம், இலங்கை.
gsritharan09@gmail.com
[2]யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம், இலங்கை.